சார்பு நீதிமன்றம், அருப்புக்கோட்டை.

OS No.42/2019

2025ம் ஆண்டு நவம்பர் திங்கள் 5–ம் நாள் வாதி சாட்சியின் வாக்குமூலம் (1889ம் ஆண்டு சாட்சியச் சட்டம் எண்.44வது பிரிவு 5வது விதியின் ஏற்பாட்டின்படி) திருமதி.P.பொன்னுத்தாய் கிரேடு 2 பெஞ்ச் கிளார்க் என்பவரால் ஆணையிட்டு சத்தியப் பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர் – நாகலட்சுமி (Dw1) | தொழில் |
| த/பெயர் | சமயம் |
| கிராமம் | சாதி |
| தாலுகா | வயது |

**முதல் விசாரணை**

நான் இந்த வழக்கின் பிரதிவாதிகள் தரப்பு 1 வது சாட்சி ஆவேன். என்னுடைய சாட்சியத்தை பிரமாணவாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். இதை படிக்கக் கேட்டு கையெழுத்து செய்துள்ளேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். என் பிரமாண வாக்குமூலத்தில் கூறியுள்ளவாறு 31.08.1980ம் தேதியிட்ட வெயிலுகந்தம்மாளுக்கு சண்முகவேலுக்கு எழுதிக்கொடுத்த பதிவு கிரைய ஆவணம் கணினி நகல் **பி.வா.சா.ஆ.8** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 03.06.1994 ம் தேதியிட்ட பொன்னுச்சாமி வகையறா மாரியப்பனுக்கு எழுதிக்கொடுத்த பதிவு கிரைய ஆவணம் கணினி நகல் **பி.வா.சா.ஆ.9** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 27.03.2022 ம் தேதியிட்ட நாகலட்சுமிக்கு மாரியப்பன் எழுதிக்கொடுத்த பதிவு கிரைய ஆவணம் கணினி நகல் **பி.வா.சா.ஆ.10** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பிரதிவாதிகளின் வீடுகளுக்கு உரிய வீட்டுவரி ரசீதுகள் எண்ணம்.6 அசல் **பி.வா.சா.ஆ.11.** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பிராதை தள்ளுபடி செய்ய வேண்டுகிறேன்.

**(வாதிகள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணைக்காக வழக்கு ஒத்திவைக்கப்படுகிறது.)**

என்னால் திறந்த நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

சார்பு நீதிபதி,
அருப்புக்கோட்டை.